# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 01 / மூன்றாந் தவணை – முதல் வாரம் ( $L_7$ $S_7$ $R_7$ $W_7$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

1). <u>மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.</u>

- கீழ்வரும் படங்களின் தொடர்பைக் கண்டுபிடித்து கதையொன்றைக் கட்டியெழுப்புவோம்.




( பொருத்தமானவாறு நல்ல படிப்பினையாக அமைய வேண்டும். )

2). <u>மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.</u>

- பிள்ளைகள் அறிந்த பழங்கள் பற்றிய சுயசரிதைகளை கூற வழிப்படுத்துக. ( பழங்கள் அல்லது முகமூடி ) அணிந்து கொள்ளலாம்.

உ+ம் வாழைப்பழம் – எனது பெயர் வாழைப்பழம்.



எக்காலத்திலும் நான் கிடைப்பேன்.
மிகவும் மலிவாகக் கிடைப்பேன்.
என்னில் பல இனங்கள் இருக்கின்றன.
நான் மிகவும் சுவையானவன்.

( அன்னாசி, பப்பாசி, மாம்பழம், விளாம்பழம்)

3). <u>மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.</u>

- கதைப் படத்தில் உள்ளவற்றை அவதானித்து வாசிக்க வழிப்படுத்துக.
  ( தூய தமிழ் மொழியில், வாசிப்பு பொறிமுறைகளை அனுசரித்து. )
- பழங்களின் பெயர்களை எழுத்துக் கூட்டலுடன் வாசிக்க வழிப்படுத்துக.

4). <u>மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.</u>

- கதைப்படத்தில் உள்ளவற்றை அவதானித்து சொற்களாக அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துக.
- பழங்களின் படங்களை வரைந்து, பெயர்களை எழுத வழிப்படுத்துக.